பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

25 03 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – கிரீஸ் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும் என்று தில்லி அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

3. சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மூன்று நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

4. ஐ நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

5. **Nicosia** கிராண்ட்ப்ரீ மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிக்கா துரோணவள்ளி வெண்கலப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

கிரீஸ் நாட்டின் சுதந்திர தினத்தையொட்டி, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **'George Gerapetritis '** மற்றும் அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா – கிரீஸ் இடையிலான ராணுவ ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<>>>>>>**

மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும் என்று தில்லி அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது

சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை இன்று தாக்கல் செய்து பேசிய தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இத்திட்டத்திற்காக 5 ஆயிரத்து 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காக 696 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தில்லியில் 50 ஆயிரம் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும் என்றும், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பட்ஜெட்டில் குடிநீர், சாலை வசதி, மின்சாரம் மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாடு உள்ளிட்ட பத்து அம்சங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.

ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கான இந்த பட்ஜெட் தில்லி அரசின் வரலாற்றிலேயே அதிக தொகை ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டாக அமையும் என்றும் திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<<>>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மூன்று நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தண்டேவாடா மற்றும் பிஜப்பூர் மாவட்டங்களையொட்டிய வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் இன்று காலை கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையின்போது இருதரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச்சண்டை ஏற்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது ஏராளமான ஆயுதங்களும், வெடிப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<<<<<>>>>>

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகைத் திட்டம் காரணமாக எஃகு துறையில் சுமார் 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகளுக்கு உத்தரவாதம் கிடைத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தை விரிவுபடுத்தியிருப்பதன் மூலம், எஃகு உற்பத்தியில் இந்தியாவின் உலகளாவிய போட்டித்திறன் மேலும் அதிகரிக்கும் என்றும் இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு குமாரசாமி செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை அடைவதற்கேற்ப மத்திய எஃகு அமைச்சகம் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எஃகு உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உள்ள நிலையில், உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம் உள்நாட்டு உற்பத்தியை மேலும் அதிகரிக்க உதவிடும் என்றும் திரு குமாரசாமி தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

வக்ஃபு சட்டத்திருத்த மசோதா எந்தவொரு மதததின் சுதந்திரத்தையும் பறிப்பதாக அமையாது என்று இந்த மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் திரு ஜெகதாம்பிகா பால் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், வக்ஃபு சட்டத்திருத்தம் நன்மை அளிப்பதாக அமையும் என்றார்.

வக்ஃபு வாரியம் என்பது ஒரு நிலையான அமைப்பு என்றும், அது ஒரு மத அமைப்பு அல்ல என்றும் அவர் கூறினார்.

வக்ஃபு மசோதா விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு **Owasi Singh** நாட்டை தவறாக வழிநடத்த முயல்வதாக கூறிய திரு ஜெகதாம்பிகா பால், இஸ்லாமியர்களின் நலனுக்காகவே இந்த சட்டத்திருத்தம் கொண்டுவரப்படுவதாகவும் தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

தெலங்கானா மாநிலத்தில் ஸ்ரீசைலம் சுரங்க கால்வாய் கட்டுமானப்பணியின்போது வெள்ளப்பெருக்கில் சிக்கிக்கொண்ட மேலும் ஒரு தொழிலாளி உடல் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22-ஆம் தேதி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது சுரங்கம் இடிந்து விழுந்ததில் எட்டு தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.

இவர்களை மீட்க மத்திய – மாநில அரசுகளின் பல்வேறு படையினரும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில், கடந்த ஒன்பதாம் தேதி குர்பிரீத் சிங் என்பவரின் உடல் கண்டெடுக்கப்பட்ட நிலையில், தற்போது மேலும் ஒருவர் உடல் மீட்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

உலக நாடுகள் இடையே ஏற்படும் மோதலை முடிவுக்கு கொண்டுவர ஐ நா பாதுகாப்புச் சபையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ நா பாதுகாப்புச் சபை கூட்டத்தில் பேசிய இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு ஹரீஷ், அமைதி காக்கும் படைகளை நிறுத்துவதால் மட்டும் மோதல்களுக்கு தீர்வுகாண முடியாது என்றார்.

அமைதிப்படையினரின் செயல்பாட்டுடன் அரசியல் ரீதியாக தீர்வுகாண்பதன்மூலமே அமைதியை ஏற்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய தீர்வுகாண்பதற்கு பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் முறையில், தற்போதைய சூழலுக்கு ஏற்ப மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு ஹரீஷ் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தமிழக பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில், மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிகள், விதைக்கூடு உற்பத்தியாளர்கள், தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கான பரிசுத்தொகையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மொத்தம் எட்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பரிசுக்கான காசோலைகளை அவர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு பாடநூல் கழகம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கியுள்ள தமிழ் - இந்தோ – ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பிட்டு அகராதி திட்டத்தின் பொது முன்னுரிமை நூல் மற்றும் முதல் தொகுதி நூலையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

<<<<<>>>>>

பெண் குழந்தைகள் நலனுக்காக மத்திய அரசு , பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கல்வி கற்பிப்போம் இயக்கத்தை கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெண் காவலர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - மோகன் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தமிழகத்தின் திருநெல்வேலியில் ஓய்வுபெற்ற காவல் உதவி ஆய்வாளர் படுகொலை தொடர்பான வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக காவல்துறை டிஜிபி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் நான்கு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யய வேண்டுமென்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<>>>>>

இலங்கையில் கடந்த 2009-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்நாட்டு போரின்போது மனித உரிமை மீறலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின்பேரில் ராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட நான்கு பேருக்கு இங்கிலாந்து அரசு தடை விதித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Nicosia** கிராண்ட்ப்ரீ மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிக்கா துரோணவள்ளி வெண்கலப்பதக்கம் வென்றார்.

சைப்ரசில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச் சுற்று முடிவில் ஐந்து புள்ளிகளை பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<>>>>>>

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி –

போர்ச்சுக்கல்லின் **Neno Borges** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 6-2 என்ற செட் கணக்கில், செக் குடியரசின் **Adam** - இங்கிலாந்தின் **Jamie Murray** இணையை வென்றது.

<<<<<>>>>>>

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டி இன்று ஜோர்டானின் அம்மானில் தொடங்குகிறது.

**Antim Panghal, Deepak Punia** உட்பட 30 பேர் கொண்ட இந்திய அணி இதில் பங்கேற்கிறது.

<<<<<>>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<<>>>>>>